கத்தோலிக்க வாரவெளியீடு
( செய்தித்தாளாகப் பதிவுபெற்றது )

மலர் : 97 இதழ்: 46
மார்கழி 2 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# இளவரசர், கசாப்புக்காரர் குடும்பஸ்திரி முத்திப்பேறுபெற்ற பட்டவிசாரணை

திருப்பாடுகளின் சபையைச் சேர்ந்தவரும், பெருங் வித்தியா வினோதருமான நரை திரை கண்ட வண. பிரான்செஸ்கோ நீரோன் அடிகளார் பொது நிலையத்தினரான சாதாரண கத்தோலிக்கர் மூவரின் முத்திப்பேறுபெற்றபட்ட மனுதாராய் அதற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்லாயிரம் மனுக்களை விசாரணை செய்வதிலே இப்போது இரவுபகல் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் தற்பொழுது 58வயதுடையவர். கசெட்டா நகரைச் சேர்ந்தவர். இவர் இத்தாலியில் செலியோ நகருக் கணித்தாயுள்ள புனித அருளப்பர்–சின்னப்பர் மகாலயத்திற்குச் சமீபமான ஒரு கன்னிகா மடத்திலே சாந்தியும், சமாதானமுடைய தமது வாசஸ்தலத்தில் அமைதியாகச் சஞ்சரித்து, மூன்று முத்திப்பேறுபெற்ற அபேட்சகர்கள்பற்றிய அத்தனை மனுக்களையும் சாவதானமாக ஆராய்ந்து வருகின்றார். கடந்த பத்து நூற்றாண்டுகளிலும் இல்லாதவிதமாய்ச் சமீபகாலத்தில் அதிகமான பொதுநிலையத்தினர் முத்திப்பேறுபெற்றபட்ட அருளப்படவிருப்பதாக இவர் கூறுகின்றார்.

முன்சொன்ன மூவரிலும் ஒருவர் இளவரசர். மற்றவர் ஒரு காசப்புக்காரர் அதாவது பன்றி இறைச்சிக்காரர், மற்றொருவர் ஒரு குடும்பஸ்திரி. தொன் ஊர்பானோ கொன்சாகா பார்பெறினி எனப்பெயரிய பலெஸ்தினாவின் இளவரசர் பாப்பரசின் கௌரவத்தைப் பெற்றும், பாப்பரசரின் "தங்கரோஸ்" வெகுமானிக்கப் பெற்றும் மகிமை பெற்றிருந்து காலஞ்சென்ற தொன் என்றிக்கோ பார்பெறினியினதும், தற்போது 77 வயதுடையவராய் பெருஜியா மாளிகையில் வாழ்கிறவருமான தொன்னா ஹென்றியெற்றே பிருங்[illegible]ரீனுடையவும் புத[illegible]வர். இவர் 1947ஆம் ஆண்டு தனது 23 ஆம் வயதில் காலஞ் சென்றார். இவருடைய மரணத்தின்பின் பிரமிக்கத்தக்க 'டயறி' ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதிலே "கிறிஸ்துவுக்காக நான் என்னைப் பரிசுத்தப்படுத்த விரும்புகிறேன்" என்ற தொடக்கம் இருந்தது.

உள்ளுடலில் தழல் நெருப்புப்போல் மிகுந்த எரிவுண்டாய் அது காரணமாக முதுகெலும்பு சம்பந்தப்பட்ட பயங்கரமான நோய் ஒன்று கண்டு நெடுநாள் தாங்கொணா வேதனை அனுபவித்து வந்தபோதிலும் மிகுந்த பொறுமையுடன் அதைச் சகித்து மகிழ்ச்சி பெருகப் புன்னகை

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### சீற்றங் கொண்ட ஆங்கில கத்தோலிக்க பெற்றோர்

ஆங்கில தேசிய பத்திரிகைகள் பலவற்றில் அரசாங்கம் பெரும் செலவு செய்து பிள்ளைகளின் தொகையைக் கட்டுப்படுத்தும் முறைகளை விளம்பரப்படுத்தி வருவதை ஆங்கில நாட்டுக் கத்தோலிக்க பெற்றோர் சங்கம் மிக வலிமையாகக் கண்டித்திருக்கிறது. விளம்பரப் படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு முறையும் மிகத் தெளிவான விபரங்களுடன் அதனால் ஏற்படும் பயன்களை அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று தூண்டும் பான்மையில் கொடுக்கப்பட்டிருப்பது கத்தோலிக்கரின்மனதைப் புண்படுத்துவதாய் இருக்கின்றது.

### பிதாவே, எம்மை வருத்துகிறவர்களை மன்னித்தருளும்

ஜேர்மனி தேசத்தில் 2ஆம் உலக யுத்தத்தின் போது ஹிற்லரினால் நடத்தப்பட்டுவந்து உபத்திரவ சாலைகளில் ஒன்றாகிய றவன்ஸ்பிறக் என்னும் தலத்திலிருந்து வெளியுலகத்துக்கு அனுப்பப்பட்ட செபமொன்று கத்தோலிக்கருக்குப் பெரும் கௌரவம் அளிப்பதாக இருக்கின்றது. அத்தலத்தில் தம்மை உபத்திரவப்படுத்திய நாசி அதிகாரிகளின் மேல் தமது கோபத்தைத் தெரிவியாது, தேவனை நோக்கி அவர்கள் தெரியாது செய்கின்ற பிழைகளை அவர் மன்னிக்குமாறு இரந்து கேட்கின்றது அச்செபம். அண்மையில் ஆங்கில நாட்டில் லிவப்பூல் நகரில் யுத்த ஞாபக தினமன்று பல கிறிஸ்தவசபையினரும் ஒன்றுகூடி நடாத்திய செபதினத்தின் போது இந்தச் செபம் வாசிக்கப்பட்டுக் கத்தோலிக்கரின் மனப்போக்கு எவ்வாறானதாய் இருக்க வேண்டுமென விளக்கப்பட்டது.

### எம். பி. ஈ. பட்டம் பெற்ற கன்னியாஸ்திரி

கொடைவள்ளல் நபீல்ட் பௌதீக நி[illegible]வனத்தில் உயர் விஞ்ஞான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சங்கைக்குரிய மௌறீன் கன்னியாஸ்திரியார் மாட்சிமை தங்கிய ஆங்கிலதேச இராணி எலிசபேத் அவர்களால் எம். பி. ஈ. பட்டம் அளிக்கப்பட்டு மகிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்.

# புனித வின்சென்ற் டிபோல் சபை புதுப்பலம் பெற முயற்சி

உலகிலே வறியவர்கள் மத்தியில் பல தேசங்களிலும் புனித வின்சென்ற் டி போல் சபை ஆற்றிவரும் மகத்தான வேலையை அறியாதவர் எவர்? தரும சிந்தனை உடைய எவரும் இச்சபையில் பணம் அல்லது பொருள் கொடுத்துதவுபவர்களாகவோ, அல்லது வறியவர்களுடன் ஊடாடி அவர்களை அறிந்து உதவிகளைப் பெற்றுக் கொடுப்பவர்களாகவோ தொண்டு செய்யலாம். தொண்டோ பெரிது. தேவைப்படும் கொடையாளர், சேவையாளர், தொகையோ போதியதாயில்லை. இத்தொண்டைப் பெருப்பிக்கவும், புதுப் பலம் கொடுக்கவும் இவ்வருடம் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எடுக்கப்பட்ட முயற்சிகளில் பிரதானமானது ஒரு விசித்திர இணைப்பு முறையாகும். அபிவிருத்தியடைந்த நாடு ஒன்றுடன் அபிவிருத்தியடையாத ஒன்று அல்லது சில நாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சிறிலங்காவுடன் இணைக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்த நாடு நியூசிலாந்து. தேவைகளை அறிந்து, உதவிகளை வழிப்படுத்துவதற்கு விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# பாக்கியமான குடும்பம்

ஸ்கொத்லாந்து தேசத்தவராகிய திரு மக்கிளின் என்பவரின் கத்தோலிக்க குடும்பம் உண்மையாகவே பாக்கியம் பெற்றதே. அவரது குடும்பத்துப் புத்திரர் புத்திரிகளில் ஏழுபேர் துறவறத்தை மேற்கொண்டு யேசுவின் விசேஷ சேவையில் உலகின் பல பாகங்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். ஐந்து புதல்விகள் கன்னியாஸ்திரிகள். இவர்களில் ஒருவர் தற்போது யப்பான் தேசத்தில் சேவை புரிகின்றார். அண்மையில் இங்கிலாந்துக்குத் தனது சபையின் ஆங்கிலப் பிரிவு சிரேஷ்டராக வரவிருக்கிறார். மறு கன்னியாஸ்திரிகள் யாவரும் அவரைப் போலவே மரியாளின் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்தவர்கள். புதல்வி இருவரில ஒருவர் ஆபிரிக்காவிலும், மற்றவர் ஸ்கொத்திலாந்திலும் குருத்தொண்டு ஆற்றுகின்றனர். 1960-ம் ஆண்டு அவரது மனைவியார் காலமானதும், திருமக்கிளின் ஒரு துறவிசபையில் விரத்தாராகச் சில காலம் செலவு செய்தார். ஆனால் சுகயீனத்தின் காரணமாகத் தமது இல்லத்திலேயே இப்போது வசித்து வருகிறார்.

### குத்திக்கொல்லப்பட்ட கன்னியாஸ்திரி முத்திப்பேறு பெற்ற பட்டம் பெற்றார்

1864ஆம் ஆண்டு தர்ம சபைக் கன்னியர் சபையில் நவசந்நியாசியாகச் சேர்ந்துகொண்ட இத்தாலிய தேச யுவதி 1894ஆம் ஆண்டு ஒரு வைத்தியசாலையில் தொண்டு செய்துவந்த காலத்தில் மனநோயால் வாதிக்கப்பட்ட ஒருவனால் அவனது கத்தியால் தாக்கப்பட்டு உயிர்நீத்தருளினார். அவர் மரணப்படுக்கையிலிருக்கும்போது தன்னைத் தாக்கியவன் தான் செய்வதென்னவென அறியாதவனாயிருந்ததால் அவனைத் தண்டியாது அவனது சுகயீனத்துக்குத்தக்க சிகிச்சைஅளிப்பதே முறையாகுமெனப் பரிந்து வேண்டிக் கொண்டார். இத்தகைய மனமும், கடமை உணர்ச்சியும் எமது சீவியத்தில் வழிகாட்டியருள வேண்டுமென்னும் நோக்கத்துடன் இக்கன்னியாஸ்திரிக்குப் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்பர் மூப்பதினாயிரம் விசுவாசிகள் மத்தியில் முத்திப்பேறு பட்டம் அருளினார்.

### பாப்பரசரின் தெரிவு முறையில் மாற்றமா?

வருங்காலங்களில் பாப்பரசரின் தெரிவு முறையில் சில மாற்றங்கள் ஏற்படலாமெனவும், கருதினால்மாருடன் உலக மேற்றிராணிமார் யாவரும் தெரிவில் பங்குபெறுவார்களெனவும் பொதுவாக எண்ணப்பட்டு வந்தது. ஆனால், அண்மையில் கிட்டியிருக்கும் செய்திகள் தெரிவு முன்போலவே கருதினால்மார் குழுவினர் மாத்திரமே செய்வார்களென பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் விரும்புவதாக அறிவிகின்றன. மாற்றத்துக்குப் போதிய காரணம் இல்லையெனவும் மாற்றத்தைப் புகுத்துவதினால் நடைமுறையில் பல கஷ்டங்கள் ஏற்படுமெனவும் பரிசுத்த தந்தை அபிப்பிராயப்படுவதாகத் தோன்றுகின்றது.

# தென் அயர்லாந்தின் பெருங்குணம்

சென்ற பல வருடங்களாக "அயர்" என அழைக்கப்படும் தென் அயர்லாந்து தேச அரசியல் அமைப்பில் அங்குள்ள பெரும்பான்மை மக்களின் சமயமாகிய கத்தோலிக்க சமயத்துக்கு விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டு வந்துள்ளன. அந்த நிலைமையை மாற்றி, விசேஷ சலுகைகளை அகற்றி, மறுசமயங்களுக்குள்ள நியாயமான நிலைமையையே கத்தோலிக்க சமயமும் பெற்றுவர அத்தேசத்திலுள்ள சகல அரசியற்கட்சிகளும் அண்மையில் முடிவு செய்திருப்பது அத்தேசமக்களின் பெருங்குணத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது. அல்லோலகல்லோலப்பட்டிருக்கும் வடஅயர்லாந்து அல்ஸரஸ் பிரிவில் சமாதானத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட ஆங்கில நாட்டு அரசாங்கம் புதிதாகத் தயாரித்திருக்கும் அரசியல் அமைப்பு விவாதிக்கப்பட்டபொழுது, கத்தோலிக்கரின் இப்பெருந்தன்மை சமாதானத்துக்கு நற்குறியாயிருப்பதை வட அயர்லாந்து விவகார அமைச்சர் வைற்லோ அவர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

### அம்பிற்றியா குருமட முன்னாள் அதிபர்

சில வருடங்களின் முன் அம்பிற்றியா குருமார் உயர் பயிற்சிக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய வண. போர்ப்ஸ் அடிகளார் தென் கிழக்காசிய தேசங்களடங்கிய பிரிவுகளின் சார்பில் அமலோற்பவ தியாகிகள் சபை உயர் ஆலோசகரில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தமது புதிய கடமைகள் அவரை வத்திக்கானிலிருந்து பிலிப்பைன் தேசத்துக்கு அண்மையில் இட்டுச்சென்றது. அங்கு போகும் வழியில் இலங்கையிலே சிலதினங்கள் தங்கிச் செல்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுக்கு ஆகாரம் அழிப்பதைவிட அதை அவனே தேடிக்கொள்ள வழிகாட்டுவதே முக்கியம். ஒருவனுக்கு உதவிசெய்வதைவிடப்பிறர்க்குஉதவிசெய்ய அவனுக்குக் கற்றுக்கொடுப்பதே நலம்.

— ஆவ்பரி

## சத்தியவேத பாதுகாவலன்

## பங்கில் ஒரு நூல்நிலையம்

விசாரணைப் பங்குகளில் நூல்நிலையங்களை அமைப்பது பற்றிய செய்தி சமீபத்தில் பத்திரிகையில் அடிபட்டது. சில விசாரணைப் பங்குகளில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அறிகிறோம். இதை மிகவும் பாராட்டத்தக்க முயற்சி என்றுதான் சொல்லவேண்டும். மக்கள் மனதை, அவர்களது கருத்துக்களை உருவாக்குவதில் நூல்கள் வகிக்கும் இடத்தை அனைவரும் அறிவர். நாட்டில் எழுத்தறிவுள்ளோர் தொகை உயர்வாகவே இருக்கின்றது. ஆயினும அவர்களுட் பெரும்பாலோர் உயர்தரக் கல்வி கற்றவரோ, உண்மையான இலக்கிய ரசனை உள்ளவர்களோ அல்லர். செல்வந்தர்களும் அல்லர். ஆகவே சாதாரண மக்கள் உயர்ந்த இலக்கியங்களைப் படிக்கும் வாய்ப்பும் சந்தர்ப்பங்களும் குறைவாகவே உள்ளன. இந்த நிலையில் மலிவாகவும் சுலபமாகவும் கிடைக்கும் பிரசுரங்களை மக்கள் நாடுவது இயல்பு. பெரும் விகிதத்தினரின் வாசினை தினசரிப் பத்திரிகைகளுடன் நின்றுவிடுகிறது. இன்னும் சிலர் மலிவான சஞ்சிகைகளையும் பொழுதுபோக்கு நூல்களையும் விரும்பிப் படிக்கிறார்கள். ஆயினும் இவையெல்லாம் மக்களின் அறிவையும் பண்பையும் வளர்ப்பதற்கோ, உண்மையான மதிப்பீடுகளை அவர்கள் உள்ளத்தில் உருவாக்குவதற்கோ அதிகம் பயன்படுவதில்லை. சிலசமயங்களில் இதற்கு மாறான வழியிலேயே மக்களை அவை இட்டுச்செல்கின்றன. இலௌகிக மனப்பான்மையை ஏற்படுத்துகின்றன. நாஸ்திகத்தையும் ஒழுக்கக்குறைவையும் வளர்க்கின்றன.

இத்தகைய கேடுகளிலிருந்து மக்கள் மீட்கப்படவேண்டுமென்றால் அந்தப்பணியை நூல்கள் மட்டும்தான் செய்யமுடியும். சமய அறிவு, ஒழுக்கம், நற்பண்புகள் ஆகியவற்றை மக்களுக்குணர்த்தி அவர்கள் வாழ்வை நல்வழியிற் செலுத்தக்கூடிய நூல்கள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

சமய நூல்கள் எத்தனை இன்று மக்கள் கைக்கு எட்டுகின்றன? அதுவும் தமிழில் கத்தோலிக்க நூல்களின் குறைபாடு வெட்ட வெளிச்சமானது. புதிய ஏற்பாடு, சங்கஏடுகள் போன்ற நூல்கள்கூடக் கிடைப்பது அரிதாயிருக்கின்றது. ஒருசில சஞ்சிகைகளைத்தவிர வேறு கத்தோலிக்க நூல்கள் மக்களுக்குக் கிட்டுவதில்லை. ஆகவே, உள்ள ஒருசில இலக்கியங்களை கூடிய மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். இதற்கு ஒரேவழி பங்குநூல்நிலையங்கள் தான். தமிழ் நூல்களுடன், பிறநாடுகளில தாராளமாக வெளிவரும் கத்தோலிக்க இலக்கியங்களும் மொழி பெயர்ப்புகளும் அங்கு இடம்பெறவேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளாக கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தில் உருப்பெற்று அவர்கள் வாழ்வை உருவாக்கிய கிறிஸ்தவ சமயம் தன்னுள் அளவற்ற செல்வங்களை உடையதாயிருக்கின்றது. அவற்றையெல்லாம் நூதனசாலைப் புதைபொருள்களாக்கிவிடாது இன்றைய மக்களுக்குப் பயன்படும்படி செய்யவேண்டும்.

## பூசை வழிகாட்டி — மார்கழி 1972

3: ஞாயிறு: திருவருகைக்கால முதல் ஞாயிறு (ஊ)
வாசகங்கள்: இசை. 63=16b—17, 64=1, 3b—8
1கொரி. 1: 3—9, மாற். 13:33-37.

4: திங்கள்: புனித பிரான்சிஸ் சவேரியார் (வெ)
வாசகங்கள்: இசை. 52: 7—10,
உரோ. 10: 10—18, மாற். 16: 15-18.

5: செவ்: நாட்பூசை (ஊ)
வாசகங்கள்: இசை. 11: 1—10, லூக். 10: 21-24.

6: புதன்: நாட்பூசை (ஊ)
வாசகங்கள்: இசை. 25: 6—10a, மத். 15: 29—37.

7: வியாழன் புனித அம்புரோசியார் (வெ)
வாசகங்கள்: இசை. 26: 1—6, மத்.7: 21, 25—27.

8: வெள்ளி: புனித மரியாளின் அமலோற்: (வெ)
வாசகங்கள்: ஆதி. 3: 9—15, 20,
எபே. 1:3—6, 11—12, லூக். 1 26—38.

9: சனி: நாட்பூசை (ஊ)
வாசகங்கள்: இசை. 30: 19—21, 23—26.
மத். 9: 35—10: 8

10: ஞாயிறு: திருவருகைக்கால 2-ம் ஞா. (ஊ)
வாசகங்கள்: இசை 40: 1—5, 9—11.
2இரா. 3: 8—14 மாற். 1: 1—18.

## இறைவாக்கு வழிபாடு

# திருவருகைக் காலத்தின் முதல்ஞாயிறு

(நற்செய்தி — மாற்கு 13: 33—37)

எச்சரிக்கையாயிருங்கள்! (அசட்டையாயிராதீர்)

விழிப்பாயிருங்கள்!! (தூங்கிவிடாதீர்)

இன்றைய திருவழிபாட்டுடன் நாம் கிறீஸ்துவின் பிறப்பிற்கு ஆயத்த காலமான திருவருகைக் காலத்தை ஆரம்பிக்கிறோம். இந்த ஆரம்பத்திற்கு அறிகுறியாக புனித மாற்குவின் நற்செய்தி இரண்டு பெரும் சொற்களை நம்முன் பறை அறைகின்றது.

எச்சரிக்கையாயிருங்கள்!
விழிப்பாயிருங்கள்!!

சாதாரணமாக இவ்விரண்டு சொற்களும் ஒன்றாக இணைந்து ஓர் அண்மிக்கும் சம்பவத்தின் அபயநிலையையும் அவசர காலத்தையும் (*Imminente, Emergency*) அறிவிக்கின்றன.

பரபரப்பு, கூத்தாட்டம், சண்டை, சச்சரவு, கலாட்டா, கல்லெறி இப்படியான ஓர் ஒழுங்கற்ற அபாயம் ஆபத்து நிறைந்த நிலைமையில் 'எச்சரிக்கையாயிருங்கள்' என்ற வார்த்தையொன்று அதிகார பூர்வமாக ஒலிக்குமாயின், அந்நிலைமையின் கதியென்ன? அங்கு ஏற்படக்கூடிய மாற்றமென்ன? சப்தம் சடுதியாய் குறைந்துவிடும். சச்சரவும் சமநிலையில் மறைந்துவிடும்; கல்லெறியும் குறைந்துவிடும். பொல்லடியும் நின்றுவிடும். எல்லாச் சப்தமும் சடுதியாக ஒய்ந்துவிடும். ஒரே ஒரு சப்தம் மாத்திரம் ஒலிக்கும். இல்லை, எதிரொலிக்கும்; எச்சரிக்கையாயிருங்கள்.

ஆனால், சப்தமற்று, சச்சரவற்று, உணர்வே அற்று, ஊக்கமேயற்று உறக்கமே உருவெடுத்திருக்கும் ஒரு நிலைமையில் 'விழிப்பாயிருங்கள்' என்ற வார்த்தையொன்று அதிகாரத் தொனியில் ஒலிக்குமாயின் அங்கு நடப்பதென்ன? அங்கு பிறப்பதென்ன? மௌனம் மறைந்துவிடும்; பொழுது விடிந்துவிடும். உறக்கம் பறந்துவிடும். உற்சாகம் பிறந்துவிடும்; உணர்வு நிறைந்ததுடுக்கம், துடியாட்டம், ஆயத்தம், ஆர்ப்பரிப்பு, ஆச்சரியம் அனைத்தும் ஓர் அவசரத்தை அறிவிக்கும்; "ஏதோ நடக்கப் போகின்றதோ? யாரோ வரப்போகின்றனரோ?" என்றாற்போல் விழித்தெழுந்தவர் அனைவரும் திறந்தவிழியை மூடாது ஏங்கி நிற்பர்.

ஆகையினால் இந்த இரண்டு சொறகளும இருவத நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் சொறகளாக இருக்கின்றன; கிறீஸ்தவர்களாகிய நாங்கள் இத்திரு[illegible]

இரண்டு கருமங்களை அவை தெளிவாக விளக்குகின்றன. அவை யாவன:

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலக கணிப்பிலே அரசனாகவும், அடிமையாகவும், படித்தவனாகவும் பாமரனாகவும், செல்வந்தனாகவும், ஏழையாகவும் கணிக்கப்பட்டிருப்பினும், இறைவனின் திட்டத்திலே முக்கிய இடம் வகிப்பனாகவும், குறிக்கப்பட்ட பொறுப்புள்ளவனாகவும் அதற்குரிய கடமை நிறைந்தவனாகவும் காணப்படுகின்[illegible] ஒரே எசமான் தன் ஊழியர்களிடம் வெவ்வேறு வேலையை ஒப்படைத்தது போல், இறைவனும் எங்களிடம் வெவ்வேறு பணியையும் பொறுப்பையும் ஒப்படைத்திருக்கின்றார்; ஒருவர் குருவாகவும் மற்றவர் குமாஸ்தாவாகவும், ஒருவர் ஆசிரியராகவும் மற்றவர் மாணவராகவும் ஒருவர் ஆலையிலும் மற்றவர் சாலையிலும் — இப்படியாக ஒவ்வொருவருக்கும் ஓர் பொறுப்பும் பணியும் இறைவனால் நியமிக்கப்பட்டிருக்கின்றது: ஒவ்வொருவரும் தன் தன் பணியை ஏற்று பொறுப்புடன் செய்து கொள்வதே இறைவனுக்குகந்தது. "ஆரிய கூத்தாடினாலும் காரியத்திலே கண் வையடா" என்று தமிழ் பெரியார் பாடியதுபோல், எங்கள்பொறுப்பிலேயும், கருமத்திலேயும், கடமையிலேயும் உண்மை உள்ளத்துடன் அசட்டையின்றி எச்சரிக்கையாயிருப்பதே தகுதியும் நீதியுமாகும்: அதுவே பரிசுத்ததனம்: அப்படிப் பணிசெய்பவனே நல்ல ஊழியனாகக் கருதப்படுவான்.

ஆனால் கிறீஸ்தவனின் கவனம் நிகழ்கால சம்பவங்களில் மட்டுமல்ல— வருங்கால சம்பவத்தின் மேலும் வேண்டும். நான் கிறீஸ்தவனென்ற மட்டில் ஒரு பிரயாணியாக, ஒரு யாத்திரிகனாக இந்த உலகினூடாகச் செல்கிறேன். இங்கு நான் நிரந்தரமாகவோ நிச்சயமாகவோ தங்கிவிடப் போவதில்லை, என் மண்ணுலக பயணம் ஒரு நாளைக்கு மரணமெனும் மாற்றத்தில் முடியும். அந்த முடிவில் விண்ணுலக வாழ்வை ஆரம்பிப்பேன்; அந்தமுடிவில் கிறீஸ்துவை எனது மணமகனாகச் சந்திப்பேன்; அவரிடம் என் மண்ணுலகஊழியத்தின் அறிக்கை சமர்ப்பிப்பேன்; ஆகையினால் வரவிருக்கும் விண்ணுலக சந்திப்புக்கு ஆயத்தம் வேண்டும்; முன்னுணர்வு வேண்டும். நிகழ்காலத்தில் நடந்துகொண்டு எதிர்காலத்தை விழிப்புடன் நோக்கவேண்டும். ஆகையால் நமது கரங்கள் கருமத்தின் மேலும் கண்கள் விண்ணுலகின்மேலும் இருக்கக்கடவன.

அருட்திரு:
எஸ். ஜே. இம்மனுவேல்

## விசுவாசிகளின் மன்றாட்டுகள்

### திருவருகைக்கால முதல் ஞாயிறு

1. இங்கே கூடியிருக்கும் இறைமக்கள் அனைவரும் மண்ணுலகத்தில் பிரயாணிகளென்றும், யாத்திரிகரென்றும் உணரவேண்டுமென்று... ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஒவ்வொருவரும் தன் தன் குடும்பத்தையும் பொறுப்பையும் வேலையையும் கவனத்துடன் இறைவனுக்குகந்த விதத்தில் செய்யவேண்டுமென்று... ஆண்டவரே.

3. எங்கள் சீவியத்தில் திரண்டு புரண்டுவரும் கஷ்டங்கள் துன்பங்கள் சோதனைகள் எங்கள் விசுவாசத்தை தளரச் செய்யாது நாங்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று ... ஆண்டவரே.

4, மரணத்தில் மண்ணகவாழ்வை முடித்து விண்ணகத்தில் கிறிஸ்துவைச் சந்திப்பதற்கு ஆவலாயும விழிப்பாயுமிருக்க வேண்டுமென்று ... ஆண்டவரே.

5. நாங்கள் ஒப்புக்கொடுக்கும் பலியும் பங்கெடுக்கும் தெய்வீக விருந்தும எங்கள் இன்றைய வாழ்விற்கு ஊட்டமாகவும வரவிருக்கும் வாழ்வின முற்சுவையாகவும அமையவேண்டுமென்று,.......

அருட்திரு எஸ். யே. இம்மனுவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மொழிப் புலவன் கட்டிய புனித ஆலயம்.....

● சொல்பவர்: ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை.

● பேட்டிகண்டு தருபவர்: எம். அரியநாயகம்.

உலகின் மூத்தவளாய், என்றும் இளமைகுன்றாக் கன்னியாய் 'எழில்' வடிவாய் விளங்கும் அன்னை தமிழின் ஆரம்பக் கல்வியைக் கற்பித்த ஆசான், ஆசிரியர் அந்தோனிப்பிள்ளையைக் காணப்போகின்றேனென்ற ஆவலில் என் உள்ளம் பூரித்துப்போயிருந்தது. திருநெல்வேலியில் வீற்றிருக்கும் புனித சவேரியாரின் ஆலயத்தை ஒட்டினாற்போல் இருக்கும் அழகிய சிறிய இல்லத்துள் நான் நுழைகின்றேன்.

"வணக்கம்! மாஸ்டர்"

"வணக்கம், மகன்!"

அதே உருவம், அதேகுரல். அடுத்த விநாடியே என் நினைவோட்டம் கடந்த காலத்தை நோக்கிப் பாய்கிறது.......

"இன்றைக்குப் பூசைக்குப் போனியா?"

" இல்லை மாஸ்ரர். "

" எழுந்துவில் வாங்குக்கு மேல்."

என் பிஞ்சுக்கால்கள் வலிக்கத் தொடங்குகின்றன அங்குமிங்குமாக நெளிகின்றேன்.

" நாளைக்குக் காலமை கட்டாயம் அம்மாவையும் கூட்டிக்கொண்டு பூசைக்குப் போகவேணும்...—" என் அருகே வந்து காதோடுகாதாகக்கூறி தன் இரு கைகளாலும் அணைத்தபடி மீண்டும் என்னை வாங்கில் உட்கார வைக்கிறார்.

19 வருடங்களுக்கு முன் ஆரம்பக் கல்வியுடன் அளப்பரிய புத்திமதிகளையும் கற்பித்த அதே மாஸ்டர், அன்று நான்பார்த்த அவரை இன்றும் அப்படியே காண்கிறேன். வியப்புடன் எழுந்த ஒருவித பெருமிதம் என்நெஞ்சில் எழுகின்றது.

"மாஸ்டர்! என்னைத் தெரியுதா உங்களுக்கு?"

"நிட்சயம் நீர் என்னிடம் படித்த பிள்ளையாகத்தான் இருக்கவேண்டும் என்ற நம்பிக்கை எனக்குத் தோன்றுகிறது மகன்" என்று மகிழ்ச்சிகலந்த கூர்மையான நோக்குடன் கூறிக்கொண்டே அமர்வதற்கு ஒரு கதிரையை இழுத்துப் போடுகிறார். சிறிது நேரம் பரஸ்பரம் நம் சொந்த, குடும்ப விவகார சுகநலன்களைப் பேசிக் கொண்டதைத் தொடர்ந்து நாம் விடயத்திற்கு வருகின்றோம்.

கேள்வி: மாஸ்றர்! நாங்கள் பேட்டியை ஆரம்பிக்கலாமா?

பதில்: மகன்! நான் அறிந்த அளவு இந்தக் கோயில் வரலாற்றின் அவசியமானவைகளைச் சுருக்கமாகச் சொல்கிறேன். நீங்கள் குறித்துக் கொண்டு மேலும் உங்களுக்கு ஏதாவது அறிய விரும்பினால் நீங்கள் கேளுங்கோ, நான் தாராளமாகப் பதில் சொல்கிறேன்.

தளர்ந்து போய் இருந்த வேஷ்டியை இறுகக் கட்டிக் கொண்டு சாய்வுக் கதிரையில் சாய்ந்திருந்த அவர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிறார். புனித சவேரியாரின் ஆலயவரலாறு தன் மூலமாகப் பலர் அறியப்போகிறார்கள் என்ற ஒருவித பெருமிதம் கலந்த மகிழ்ச்சி முகத்தில் பிரதிபலிக்க, புது உற்சாகத்துடன் பேசத் தொடங்குகிறார்......

மாஸ்: கொழும்புத்துறைப் பள்ளிக்கூடத்திலிருந்து பெரிய ஊர்வலம். மாணவர்களும், ஆசிரியர்களும் இரட்டைக்குதிரைபூட்டிப் பான்ட் வாத்தியங்களுடன் ஜூலன் ஆண்டவரையும், சிங்கக்குட்டி ஞானப்பிரகாசம் சுவாமியையும் . அழைத்துவர வெடிச் சத்தம் வானைப்பிளக்க ஜூலன் ஆண்டவர்தான் சவேரியார் கோவிலுக்கு அத்திவாரக் கல்லை நாட்டினார். இந்த மகத்தான வைபவம் நடந்தது 1910-ம் ஆண்டு. குருநகரைச சேர்ந்த இராசேந்திரம் மூப்பர்தான் இக்கோவிலின் கட்டு வேலைகள் செய்தவர்.

கேள்: இங்கு இக்கோவிலைக் கட்டுவதற்கு ஞானப்பிரகாசம் சுவாமியாருக்கு எதிர்ப்புகள் இருக்கவில்லையா?

மாஸ்: மிகவும் கடுமையான எதிர்ப்பு. [illegible]லும், சுவாமியார் தெய்வ நம்பிக்கையுடன் தன் திறமையையும் சேர்த்து இக்கோவிலைக் கட்டி முடித்தார். இந்துக்கள் மத்தியில் இவ்விடத்தை வாங்குவதற்குத் தான் எவ்வளவோ கஷ்டப்பட்டாரென்றும், அதற்குச் சவேரியார்தான் தமக்குத் துணைபுரிந்தாரென்றும் சுவாமியார் அடிக்கடி எங்களுக்குச் சொல்லுவார். அவர்தான் பன்மொழிப் புலவனும் பெரும் ஆராய்ச்சியாளனுமாயிற்றே! "அந்தோனிப்பிள்ளை! இந்த இடம் எபபேர்ப்பட்ட இடம் என்று உனக்குத் தெரியுமா? சங்கிலியன் காலத்தில் இதுதான் அவனுடைய பூந்தோட்டம். மாலை நேரம் இங்கதான் அவன் பூப்பறித்துக் கொண்டு இராசபாதை வழியாகப் புதாரயன் குளத்திற்கு அருகிலுள்ள கேணியில் நீராடிவிட்டுச் சாமிகும்பிடுவானும்." இப்படித் தம ஆராய்ச்சியில் அகப்பட்ட எத்தனையோ விபரங்களை ஓய்வு நேரங்களில் எங்களுக்குச் சொல்லுவார். சாம்பிடுகின்ற நேரம்தான் அவருக்கு ஓய்வு. வேதப்பரப்புதல் அலுவல்களில் ஞானப்பிரகாசம் சுவாமியைப் போல......

கேள்: மாஸ்றர்! அத்திவாரம்போட்ட நாளிலிருந்தே இக்கோயிலை முழுமையாகக் கட்டத் தொடங்கி விட்டாரா?

அவர் திசை மாறிப்போக முயற்சிப்பதை மாற்றுவதற்காக இக்கேள்வியைக் கேட்டு வைக்கின்றேன். என் குறுக்கீட்டைப் புரிந்து கொண்டு அர்த்தம் கலந்த ஆழ்ந்த பார்வையோடு என்னை நோக்கிச் சிரித்தபடியே தம் பேச்சைத் தொடங்குகிறார்.

மாஸ்: வெறும் ஓலைக் கொட்டிலாகத்தான் சுவாமியார் போட்டிருந்தார். குருமாருக்கென பெரிய அறை வீட்டைத்தான் சுவாமியார் முதலில் கூட்டினார். அதன் பிறகு இச்சிறிய பள்ளிக்கூடத்தைக் கட்டினார். கடைசியாகத்தான் கோயிலைக் கட்டினார். ஆயினும் கோயில் பூச்சு வேலைகள் பின்பு, ராஜ[illegible] சுவாமி இருந்தபொழு[illegible] தீனலயச் சேர்ந்த பிரான்சிஸ் பிள்ளை என்பவர்தான் தன் சொந்தச் செலவில் செய்து கொடுத்தார். இவர் சவேரியாரில் நிறைந்த பக்தியுள்ளவர். அந்நாட்களில் கடைசி நோவினையை இவர்தான் செய்து வந்தார்.

கேள்வி: எத்தனை குடும்பங்கள்வரை இங்கு சுவாமியாரால்...?

மாஸ்: 30குடும்பங்களுக்கு மேல் மனந்திரும்பி ஞானதீட்சை பெற்றார்கள். இஙகிருந்து கொண்டுதான் சுவாமியார் கோண்டாவில்— உரும்பிராய் கோப்பாய் ஆகிய பகுதிகளிலும் கோவில்களைக் கட்டினார். ஓரிரு வருடங்களுக்குள்ளேயே சவேரியாரின் அருளால் அவர் பக்தி பல இடங்களிலும் பாவத் தொடங்கியது. முக்கிய தினமாக வெள்ளிக்கிழமைகளில் பல இடங்களிலிருந்தும் மக்கள் அதிகமாக வரத் தொடங்கினார்கள். இன்றும் அப்படியே.

கேள்வி: மாஸ்றர்! நான் கேட்க மறந்துவிட்டேன். நீங்கள் சுவாமியாருடன் ஆரம்ப காலத்திலிருந்தே இங்கிருந்து வருகிறீர்களா? அல்லது பின்பு அவர் உங்களை அழைத்து வந்தீர்களா?

மாஸ்: நான் படிக்கும் பொழுதே சுவாமியாருக்கு என் தந்தை மூலமாக அறிமுகமாகியிருந்தேன். 1923-ம் ஆண்டுதான் ஈச்சமோட்டையிலிருந்த என்னை தன் பள்ளிக் கூடத்திற்கு ஆசிரியனாகவும் கோவிலுக்கு உதவியாகவும் என்னை அழைத்து வந்தார். அன்றிலிருந்து இன்றுவரை 30 வருடங்களாக என் சவேரியாருக்கு...

இதை அவர் கூறும்பொழுதே தொடர்ந்து பேசமுடியாமல் நெஞ்சு விம்மி-நாவின் வலிமை தளர்ந்து கண்களில் நீர்மல்கிறது. அவரின் பக்திப் பிரவாகத்தைக் கண்டு என் நெஞ்சமும் புனிதர் சவேரியாரை நினைவில்நிறுத்தி மானசீகமாக அவரிடம் வேண்டிக் கொள்கிறது.

கேள்வி: மாஸ்டர்! இக்கோ[illegible] யாரும்...?

மாஸ்: நான் முதலில் சொன்னபடி முக்கியவேலையாக பாடசாலையில் படிப்பிக்கத்தான் என்னை அழைத்து வந்தார். கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை என்பவர்தான் சுவாமியார் காலம் தொட்டு 22 வருடங்களாக சங்கிடுத்தாமாக பணியாற்றினார். உண்மை ஊழியனாக எவ்வித கடினமான வேலையானாலும் மனங்கோணாது செய்துவந்தார். இவரைபபோலவே உபதேசியாய் இருந்த உசன் ஊர் தேவசகாயம்பிள்ளையும் சுவாமியாருடன் இணைந்து தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் மத்தியில் அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டார்கள்.

இக்காரணங்களினால்சுவாமியாரைப் பலர் கொலை செய்யக் கூட முற்பட்டார்கள். அவர்களுக்குப்பின் தன் கோவிலைப் பார்க்கும் பணியை சவேரியார் என்மீதுதான் சுமத்தியிருக்கிறார். அதற்காக நான் அவருக்கு என்றும் நன்றிஸ்தோத்திரம் உள்ளவனாக இருந்து வருகின்றேன்.

கேள்வி: இங்கு எந்நாளில் சவேரியாரின் திருநாளைக் கொண்டாடுகிறீர்கள்?


மாஸ்: ஞானப்பிரகாசம் சுவாமி காலத்திலிருந்தே பங்குனி மாதம் 13-ம் திகதி அவர் மரித்த நாளையும், மார்கழி மாதம் 3-ம் திகதி சவேரியார் புனிதர்பட்டம் பெற்ற நாளையும் திருநாட்களாகக் கொண்டாடி வருகிறோம். கிறிஸ்தவர்கள் அல்லாத மக்கள் மத்தியில் தனியாக புனிதர் சவேரியார் இங்குவீற்றிருந்தாலும் அவரை நாடிவரும் பக்தர்களுக்கு குறைவேயில்லை. நானறிய அவரை நாடிவந்தோர்களில் எண்ணற்றோர் அவர் அருளைப் பெற்றுள்ளார்கள். அதிகமாக நோய்வாய்ப்பட்டோரும் பிள்ளைப்பாக்கியம் இல்லாதவர்களும் சவேரியாரிடம் தஞ்சமென வந்து ஆறுதல் அடைந்துள்ளார்கள்.

கேள்வி: மாஸ்றர்! உங்கள் வாழ்க்கையில் சவேரியார்...?

மாஸ்: என் வாழ்வில் நான் அவரிடம்... என்னை அவர் என்றும் தன்னருகே வைத்திருப்பதே எனக்குப் பாக்கியம் தானே.

கோவைக்குச் சென்று எண்ணற்றமக்கள் அவர் அழியா உருவத்தைப் பார்த்து பக்தியிலும் பரவசத்திலும் பலர் வியப்பிலும் மூழ்கியிருக்கிறார்கள். ஆனால் அந்தப்பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை, நல்ல மரணத்தை அவர் மூலம் நான் அடைந்து அவரைத் தரிசிப்பேன் என்ற நம்பிக்கைமட்டும் என் நெஞ்சில் நிறைந்திருக்கிறது.

அவர் கண்கள் கலங்குகின்றன. மன நிறைவோடு என்னைப் பார்க்கிறார் நானும் என் மனம் நிறைந்த என் நன்றியைக் கூறிக்கொண்டு அவரிடமிருந்து விடைபெறுகின்றேன்.



## ○ உதிர்ந்த மலர்கள் ○

தெய்வதரிசனம்: கண்களைமூடித் தியானத்தில் ஆழ்ந்திருக்கும்போது மட்டும்தான் இறைவனைத் தரிசிக்க முடியும் என்று நினைத்தாயா?

கண்களை அகலத்திறந்து, தெய்வீகக் கண்களோடு உலகைப் பார்! லட்சோபலட்சம் தெய்வங்களை உன் கண் முன் காண்பாய்.

* * *

சமயம் (மதம்) சமயத்தின் அடிப்படைத் தத்துவமே நம்பிக்கை. இதன் செயலோ தொண்டு. இதன் நோக்கம் புனிதம். இதன் ராஜ்ஜியமோ தனிமனிதனின் மனப்பரப்புக்குள் அடங்குவது. கடவுள்பக்தியும், சமயஞானமும் இல்லா கலைவாழ்வு எவ்வளவு சுத்த இருதயத்தோடு செயல்பட்டாலும் அது மிருகவாழ்க்கைக்குச் சமம்.

— ஓர் அறிஞன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலித்துக்கொண்டேயிருக்கும்

இரண்டாயிரம் ஆண்டுகெட்குமுன் இறைமகன் எழுப்பிய ஒலி—அன்பின் வேண்டுகோள் — அடங்கிப்போய் விட்டதா? இது இன்றைய கேள்வி! காலத்தின் ஏற்றம்—புதிய தோற்றம் மனத்தை மாற்றியிருக்கலாம்! இப்படி அலைமோதித் தத்தளிக்கும் பல உள்ளங்கள்.........

தாமே உயிராகி, உருவாகி இருக்கின்றஇறைவன் எவன் உள்ளத்தோடு சங்கமமாகி வாழ்கின்றானோ, அங்கிருந்து கொண்டே தன் செய்தியைப் பறைசாற்றுகிறான் என்பதைப் புரிந்துகொண்டால்.........

அன்றேல், இதை மறைக்கின்ற—மறக்கின்ற தன்மையினால் உன் வாழ்வு உண்மையிலேயே வியப்புக்குரியதாகத் தோன்றின்— உன் சபைவாழ்வு விபரீதமாக மாறுமாயின்... ......! ஐயகோ! நீங்குமோ ஏங்கித் தவிக்கும் ஈழத்துத் திருச்சபையின் உள்ளத்துப் பிரச்சனைதான் என எண்ணுமின்.........“ஊனை வென்றனன், உள்ளத்துள் எழுந்தனன், உலகை உய்விக்க உயிர்த்தெழுந்தனன் கிறிஸ்து” என்று முழங்கின் என்ன வெட்கமோ?

ஊரார் ஏது உரைப்பார் என்றென்ன தயக்கமோ? இருள் நீங்க—ஒளி துலங்க—இறைஒலி முழங்க — உன்னை அவன் இங்கு வைத்தனன் என்றதை மறந்தனையோ? மலிந்த உன் ஊழல்கள் நலிந்திட, உயர்ந்துவரும் பிரச்சினைகள் தீர்ந்திட துணிவுகொள்மின்.

நீ பெற்ற கிறிஸ்து, விலையில்லா முத்து, நிகரற்ற அன்பின் சொத்து. இவரில் பெருமைகொள். இனியும் பொறுமை வேண்டாம் பறைசாற்றிடும் காலமிதோ — பயம் வேண்டாம். நேரமோ சொற்பம்; துணிந்திடு, விரைந்திடு.

உள்ளம் தன்னில் அவன் எழும்வரை—உலகுக்கு மீண்டும் வரும்வரை, “உலகின் எத்திசைக்கும் சென்றிடவேண்டும்; நற்செய்தி முழங்கிட வேண்டும்” என்று உரைத்த அவன் கட்டளை ஒன்றே உன் குறிக்கோளாய்க் கொள்வதே உன் உயர் பணியாகும்.

அன்றொருநாள் எழில்கொள் ஈழமண்ணிலே, கூர்வாளின் கொடிய முனையிலே குருதிசிந்திய 600 அன்பர்கள் கிறிஸ்துவின் மறைக்குப் பறைசாற்றிய மன்னார் வேதசாட்சிகள் மாதோட்டப்பகுதிக்கு முடிவில்லா மகிமையைத் தேடிக்கொடுத்தனரே. அதையும் நீ மறந்தனையோ!

அன்னவர் மாண்டு மடிந்த செய்திகேட்டு மகிழ்வுற்று புனிதர் சவேரியார், திருச்சபையன்னைக்கு ஊதாவிளைத்த தீங்கினை மன்னார் வேதசாட்சிகளின் குருதியால் ஈடுசெய்தனன் இறைவன்என, பணியாளர் படைத்தலைவன் புனிதர் இஞ்ஞாசியார் இறுமாப்படைந்தார். ஆயிரம் மைல்களுக்கப்பால் இத்தனை ஆர்வம் எய்தினரென்றால், உன்னார்வம் எங்கேயோ? புலம்பிடு தாயகமே!

— சுவாமி ஜெயசீலன்

திருநெல்வேலி—நல்லூர்
புனித சவேரியார்
ஆலய ஆண்டு விழாவையொட்டிய
வேதபோதக சிறப்பிதழ்
3-12-72

## கோவாவில் அழியா உருவம்

பூமியிலிருந்து வெட்டிஎடுக்கப்பட்ட செங்கிறக் கற்களால் கட்டப்பட்ட பிரமாண்டமான பொம்யேசு ஆலயம் எழிலோவியமாய்க்காட்சிதருகின்றது. அரசினரின் காவலாளிகள் ரோந்துபுரிந்தவண்ணம் நிற்கின்றனர். ஆலயத்தைச் சுற்றி அமைதியான அழகிய சோலைகள் மத்தியில் கட்டப்பட்டிருக்கும் திருக்குடும்ப மடங்கள், அருகே மௌனமாய் ஓடிக்கொண்டிருக்கும் மண்டோவி ஆறு, கரையோரமாகப் பூத்துக் குலுங்கும் கோவா மாம்பழச் சோலைகள். இத்தகைய கலையழகு வாய்ந்த சூழலில் வானளாவி நிற்கும் 'பொம் யேசு' ஆலயத்தின் சரித்திரத்தைப் புரட்டுகின்றோம்......

இவ் ஆலயம் 1589-ம்ஆண்டில் கட்டப்பட்டது. யேசு சபைத் துறவிகளின் வீடுகள் அருகேயே உள்ளது. புனிதரின் பட்டமளிப்பு விழாவின் முன் அவரின் அழியாஉடல் இங்குதான் வைக்கப்பட்டிருந்ததாகச் சான்றுகள் சாட்சி பகர்கின்றன. பின்பு 1659-ம் ஆண்டு சித்திரைமாதம் 24-ந் தேதிதான் சவேரியாரின் அழியா உடல் பொம்யேசு ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு இன்றுவரை பலமான காவலுடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1752-ம், 1965 ஆம் ஆண்டுகளுக்கிடையே 12தடவைகள் சவேரியாரின் உடல் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது

தக்க பாதுகாப்பின்றி உடலை வெளியே எடுப்பது கிடையாது. ஏனெனில், சில பக்தர்கள் பக்திவேகத்தில் அவரின் உறுப்புகளைக் களவாடக்கூட எத்தனித்து சித்தியும் கண்டிருக்கிறார்கள். ஒருமுறை பலர் மத்தியிலேயே முத்திசெய்ய வந்தபெண் அவர் கால் விரலொன்றைக் கடித்துவிட்டாள். இப்படிப்பட்ட காரணங்களினால் இவரின் வலது காலில் பெருவிரலைத் தவிர ஏனைய விரல்கள் இல்லை. வலதுகையின் ஒருபாகம் ஐரோப்பாவிலும், மறுபாகம் ஜப்பானிலும் உள்ளது.

# தீ பரவட்டும்

“உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், உன் ஆத்துமத்தை இழந்து போனால் அதனால் வரும் பயன் என்ன?”

இற்றைக்கு 400 வருடங்களின்முன் பரீஸ் பல்கலைக்கழகச் சுவர்களினூடே எதிரொலித்தது இப்புனித வார்த்தைகள். எவரெவர் செவிகளில் இவ்வார்த்தைகள் விழுந்தனவோ, அவர்கள் எல்லாரும் இவ்வார்த்தையினால் பலமாகத் தாக்கப்பட்டனர்.

இத்தலையவர்களில் ஒருவர்தான் புனித பிரான்சிஸ் சவேரியார். பிரபு குலத்தில் உதித்த பெருமகன், உடன் பிறந்தவர்களிலெல்லாம் அறிவாற்றலால் உயர்ந்தவன், எடுப்பான தோற்றம், எவரையும் வசீகரிக்கும் ஆட்தன்மை. இத்தனையும் பொருந்திய பதினெட்டு வயது நிரம்பத்தக்க இவ்விளைஞன், கல்வித்துறையில் மெய்யியலில் மீண்டும்கூடிய திறமை பெறும் பொருட்டு 1525-ல் பரீஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொண்டார். அதே வேளையில் தன்படிப்பை முற்றுப் பெறச் செய்யும் நோக்குடன் புனித இஞ்ஞாசியார், 1528-ல் அதே பல்கலைக்கழகத்தில் வந்து சேர்ந்தார். ஆன்ம இரட்சணியத்திற்காகத் தம்மை முழுமையும் இறைவனுக்கு அர்ப்பணிக்கக் கூடிய ஒரு சபையை உருவாக்க வேண்டுமென்ற புனித ஆவல் இவர் எண்ணத்தில் இடம் பெற்றிருந்தது. இதற்கெனத் தகுதிவாய்ந்தவர்களைத் தேடி அலைந்த இவரின் கண்ணோட்டத்தில் அகப்பட்ட இருவரில் சவேரியாருஞ் ஒருவரானார்.

உலகரீதியான பெரும்இலட்சியங்களாலும் அளவுக்கு மிஞ்சிய அறிவுத் திறனால் ஏற்பட்டவீண் பெருமையாலும் ஆட்கொள்ளப்பட்டிருந்த சவேரியாருக்கு இஞ்ஞாசியாரின் ஏழ்மையும், அவர் தெரிந்து கொண்ட வாழ்வும் ஏளனத்திற்குரியதாகவே இருந்தது. எனினும் இஞ்ஞாசியார் மனந்தளரவில்லை. சவேரியாரின் அறிவாற்றலையும், அவர் கொடுக்கும் விரிவுரைகளையும், இறைவன் அவருக்குக் கொடுத்த அளப்பரிய கொடைகளையும் புகழ்ந்து பாராட்டியதுமன்றி—தேவையான போது பணஉதவிகளை முதலாக அளிக்க முன்வந்தார். நாளடைவில் புனித இஞ்ஞாசியாரின் உதாரகுணத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்ட சவேரியார், பிறப்பினாலே உயர்ந்தவரான இஞ்ஞாசியார் இறையன்பால் உந்தப்பட்டே இத்தகைய ஏழ்மை வாழ்வைத் தெரிந்து கொண்டார் என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். அத்தோடு, புனித இஞ்ஞாசியார் அடிக்கடி கூறிய அப்புனிதவார்த்தைகளின் அர்த்தத்தை ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினார். இதன்பயனாக, கிறீஸ்துவின் நற்செய்தியைப் பரப்ப புனித இஞ்ஞாசியார் அமைத்த குழுவில் இவரும் ஒருவரானார்.

உலகமெங்கும் போய் நற்செய்தியைப் போதியுங்கள். இது கிறீஸ்துவின் கட்டளை. இராயப்பரின் வழித்தோன்றலைத் தலைவராகக் கொண்ட ஆயர் குழுவால் திருச்சபை முழுவதன் வேண்டுதலோடும், ஒத்துழைப்போடும் இக்கட்டளை தொடர்ந்தாற்றப்பட்டே வருகின்றது. இறைவனால் தெரியப்பட்டு, தூய ஆவியால் நிரப்பப்பட்டு, கிறீஸ்துவின் அதிகாரத்தோடு—அவர் நாமத்தைப் போதிக்க, எக்காலமும் இப்புனிதபணிக்கெனயாரோ அழைக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இவ்வுன்னத அழைப்பையேற்று, கிறீஸ்துவின் கட்டளையை தொடர்ந்து



நிறைவேற்றுபவர்களின் அயராத உழைப்பாலும், தன்னலமற்ற சேவையாலும் கிறீஸ்துவின் மந்தையில் புதிய குழுக்கள் சேர்க்கப்படுகின்றன, இதனாலே கடவுளின் மகிமையும், புனிதர்களின் தொகையும் வளர்ச்சி காண்கின்றன.

இச்சிறப்புமிக்க பணியில் முதலிடம் பெறுபவரும் இப்பணியில் ஈடுபடுவோர்க்குப் பாதுகாவலராக உள்ளவரும் நாம் இன்று பெருமையுடன் நினைவு கூரும் புனித பிரான்சிஸ் சவேரியாரே! “இந்திய மக்களின் அப்போஸ்தலன்” என இப்புனிதர் அழைக்கப்பட்ட போதும், எம் ஈழவள நாட்டிற்கும் வருகை தந்தார் என வரலாறுகள் சான்று பகர்கின்றன.

கிறீஸ்தவர்கள் என்ற உரிமையில் இப்புனிதரின் திருநாளைக் கண்டு இன்புறும் நாம், அவரின் புனிதவாழ்வில் மிளிர்ந்த சில உண்மைகளை இன்றைய தினத்தில் சிந்திப்பது பொருத்தமானதே. கிறீஸ்தவர்களெனக் கூறிக்கொண்டு, கிறீஸ்துவின் நற்செய்தியை வாழாது, அதனைப் புறக்கணித்த மக்களை இவர் பெரிதும் கண்டித்தார். ஆன்மாக்களின் இரட்சிப்பிற்காக, எமது உயிரை வேண்டுமாயினும், கொடுக்கத் தயங்கக் கூடாது என்ற உயரிய இலட்சியத்தோடு வாழ்ந்தார். பரித்தியாகமும்-நன்முன் மாதிரிகையும் நிறைந்த தம் ஏழ்மை வாழ்வால் தமது போதனைக்கு அர்த்தம் கொடுத்தார், பகல் முழுவதும் சமுதாயத்தில் பணியாற்றிய பின், இறைமகன் கிறீஸ்துவைப் போன்று, இராக் காலங்களில் இறைவனுடன் செபத்தியானத்தில் ஒன்றித்திருந்தார். இந்தியா, மலாக்கா—ஜப்பான் ஆகிய பிறநாடுகளில் சமயம் பரப்பச் சென்ற இப்புனிதரைச், சரித்திரங்கள்-இன்னுமொரு புனித பவுல் என அழைப்பதில் பெருமை கொள்கின்றன. இறுதியாக இவர் சீனாவில் தம் பணியைத் தொடரப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போதே நோய்வாய்ப்பட்டு, மோயீசனைப் போன்று தாம் காணவென விரும்பிவந்த பூமியைக் காணாமல் சீனாவின் எல்லையிலே தமது 46-வது வயதில் இறைவனில் புனிதர் ஆனார். சத்திய மறைக்கு உருக்கொடுக்க வந்த இவ்வுத்தம உத்தமர்களை நாம் எம் மனக்கண்முன் கொண்டுவருவோம்; இவர்கள் எம்மை நோக்கி எழுப்பும் வினாக்களுக்கு விடையிறுக்க எம்மால் முடியுமா? திருமுழுக்கால் கிறீஸ்துவின் மறையுடலாம் திருச்சபையில் அங்கத்தவர்களாகிவிட்ட நாம்—அம்மறையுடலின் வளர்ச்சிக்காக என்ன பணியாற்றுகின்றோம்? திருமுழுக்கின் அழைப்புக்குச் செவிமடுத்த நாம், அதே வேளையில் அவ்வழைப்பு கேட்டுநிற்கும் பணியையேற்க முன்வருகின்றோமா? கிறீஸ்துவின் ஒருடலாக்கப் பெற்று இவ்வுலகில் வாழும் கிறீஸ்தவ விசுவாசிகளாகிய பொதுநிலையினராலேயே இப்பணியைத் திறம்பட ஆற்ற முடியும் என 2-ம் வத்திக்கான் சங்கமும் அறிவுறுத்துகின்றது. எனவே, திருச்சபையின் மக்கள் என்ற ரீதியில் எமக்கே சிறப்பாக உரிய மறைபரப்புப் பணியைப் பற்றி சிந்திப்போம். சிந்திப்பதைச் செயற்படுத்தி ஆண்டவனின் இராட்சியம் அகிலமெலாம் பரம்ப ஒத்துழைப்போம் வாரீர்.

### புனித சவேரியாரின் வாழ்க்கைத் துணுக்குகள்

| | | | |
|---|---|---|---|
| 1506 | சித்திரை 6 | ... | சவேரியார் நவார், ஸ்பெயின் நாட்டில்பிறந்தார். |
| 1530 | | ... | பரிசில் பேராசிரியராகக் கடமை. |
| 1537 | ஆனி 24 | ... | வெனிசில் குருப்பட்டாபிஷேகம். |
| 1542 | வைகாசி 6 | ... | இந்தியமண்ணில் கால்வைத்தார். |
| 1545 | தை-புரட். | ... | இந்தியாவைவிட்டுப் புறப்பட்டு “மலாக்கா” வந்தடைந்தார். |
| 1549 | ஆவணி 15 | ... | ஜப்பான் வந்தடைந்தார். |
| 1552 | மார்கழி 3 | ... | சீனாவின் அருகேயுள்ள சான்சியன் தீவில் மரித்தார். |
| 1554 | பங்குனி 16 | ... | அழியா அவர்உடல் கோவாவில் வரவேற்கப்படுகிறது. |
| 1662 | ,, 12 | ... | புனிதர் பட்டம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உன்னதங்களிலே தேவனுக்கு..."

(பி. ஜே. அமிர்தநாயகம்)

## நல்ல மனமுள்ளவர்க்கு சமாதானம்

மனித வரலாற்றிற்கு அப்பாலானவர் வரலாற்றில் கலந்த சம்பவம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் நடந்த சம்பவம். சகலத்தையும் கடந்தவரும் சகலத்தையும் ஆண்டு நடத்துபவரும் அவரே. சகலத்திற்கு மேலானவரும். கடந்தவரும் வரலாற்றில் உள்ளோருக்குத் தம்மையும் தனது பரம ஆனந்தத்தையுமே அளிக்கிறார். அவரின் அரசையும் வல்லமையையும் மாட்சியையும் ஏற்பவர்களுக்கு அவர் அளிப்பது அவரின் சமாதானம். அவர் ஒருவரே நல்லவர், அவரை ஏற்பவர்கள் தங்கள் நல்ல மனத்தைக் காட்டுகின்றனர். அவர்கள் அவரின் சமாதானத்திற்கு உரித்தாளராகின்றனர். இதுவே நத்தார் சோபனம். இதைப்பெற்றுக் கொள்ளவே கிறிஸ்தவர்கள் இக்காலத்தில் தங்களை ஆயத்தம் செய்கின்றனர். எனவே இக்காலத்தை ஆகமனகாலமென அழைக்கிறோம். பெரியவர்களுக்கு வரவேற்புச் செய்ய நாம் பழகி இருக்கிறோம். அவர்களின் பதவிக்கேற்க அவர்களின் வரவேற்பைச் செய்கிறோம். தேவாதி தேவனின் வரவுக்கேற்ப வரவு செய்யத் தெரியும், சத்திய திருச்சபைக்கு நமது மாதாவாகிய திருச்சபையின் மனத்திலும் உணர்ச்சியிலும் விடாயிலும் தாராளதன்மையிலும் நாம் கலந்து கொள்வோமாக.

## தேவனளிக்கும் சமாதானம்

மனிதன் தன் சமாதானத்தை என்றும் தேடுகிறான். அதையே அடைய விரும்புகிறான், இடைவிடாது முயற்சிக்கிறான். புனித அகுஸ்தினார் கூறுவதுபோல் அதை அடையுமளவும் அவன் ஆறமாட்டான். தான் சேர்ந்து கொண்ட சமூகத்தின் ஒத்துழைப்பை வேண்டுகின்றான். அதையும் புனிதமாக்குகிறான். தன்னையும் புனிதமாக்குகிறான். தானும் சமூகமும் மாற்றமடைவதைக் காண்கிறான். தாமதிப்பதையும், தவறுகிறதையும் கண்டிக்கிறான். தானும் சமூகமும் முன்னேறுவதைப் பாராட்டுகிறான். சமூகமும் தானும் வளர்ச்சியடைவதையும் முதிர்ச்சியடைவதையும் மெச்சுகிறான். எங்கு முன் செல்லுகிறான்? யாரால் உந்தப்படுகிறான்? யாரில் வளர்ச்சி பெறுகிறான்? அவன் தேவனிலும், தேவனாலும், தேவனோடும் வளரும்போது தேவன் அவனுக்களிக்கும் சமாதானத்தைப் பெறுகிறான். சகலத்தையும் கடந்தவர், அவன் உள்ளே வந்து விட்டால் அவனில் கடவுள் வசிக்கிறார். அவனில் இருந்து கடவுள் புகழ் பெறுகின்றார். கடவுளின் மாட்சி அவனில் மிளிருகின்றது. எப்படிக் கடவுளின் சமாதானம் அவனில் நிலைத்திராது இருக்க முடியும்? இச்சமாதானத்தை உலக விஞ்ஞானமும், உலக சன்மார்க்கமும் அளிக்கமுடியாது. ஏனெனில் இவை சகலத்தையும் கடந்தவரைக் கடந்தவையல்ல.

## உலகமளிக்கும் இன்பம்

உலகம் அளிக்கும் இன்பம் உலகம் அளவு படைக்கப்பட்ட எதுவும் படைத்தவரிலும் மேலானது அல்ல. ஒரு வீடோ, மேசையோ, கதிரையோ, வேறு எந்தத் தச்சுப் பொருளோ அதை உருவாக்கினவனிலும் மேலானதல்ல, அது தனது உருவத்தையும் மதிப்பையும் பெறுமதியையும் தச்சனின் ஆற்றலில் இருந்தே பெறுகிறது. ஆனால், சாதாரண தச்சனே அப்பொருளின் மூலப்பொருளாகிய மரத்தைப் படைக்கவில்லை. அதை அவன் உண்டாக்கவில்லை. மேலும் தச்சன் தனது ஆற்றலையும் ஒரு சிறந்த குருவிடம் படித்தால்தான் அப்பொருள்களை அவனால் உருவாக்கக்கூடியதாய் இருக்கிறது. இப்பொருளின் தேவையும் வேறு ஒருவருக்கு வேண்[illegible]ருந்தால்தான் தச்சனும் தேவைப்பட்டான். ஆனால், கடவுளோ இவ்வாறு எல்லைகளாலும், தேவைகளாலும் உலக மதிப்புகளாலும் கட்டுப்படாதவர். அவர் சகலத்தையும் தனது மகிமைக்காகவும், மனிதனின் நித்திய இன்பத்திற்காகவும் உண்டாக்கினார்.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தனைவணங்க." எனவே உலகம் அளிக்கும் இன்பம் உலகமளவு. கடவுள் அளிக்கும் இன்பமோ சகலத்தையும் கடந்தவர் அளவு. எனவே அவரைத் தனிநாயகனெனவும் பேரின்ப நாயகனெனவும் அழைக்கிறோம்.

## புனித அகுஸ்தீனார் படித்த பாடம்

பரம திரித்துவத்தைச் சிந்தித்தார் புனித அகுஸ்தீனார். தேவனைத் தன் மனதில் முற்றாகக்கொள்ள மிகவும் முயற்சித்தார். சிருட்டிகரை ஒரு அற்பனாகிய சிருஷ்டி அறிய மிகவும் முயற்சித்தார். மிகவும் தெளிவான பாடம் ஒன்றைப் படித்துக் கொண்டார். முடியவே முடியாது எனப் படித்தார். முற்றாக சுவைக்க முடியாததை எப்படி அனுபவிக்க முடியும்? எப்படி தேவன் அளிக்கும் பரம ஆனந்தத்தை மனிதன் பெறமுடியும்? "இது எப்படி ஆகமுடியும்?" என்று கலங்கினாள் கன்னியர்களின் இராக்கினியான மரியாள் அன்றொருநாள். அவள் கணவனை அறியாதவள். "இது தேவனால் ஆகமுடியும்" என்று திருவாய் மலர்ந்தார் தேவதூதன். எப்படி மரியாளின் சம்மதம் மூலம் வார்த்தையானவர் மாமிசமானாரோ அப்படியே மரியாளின் அடிமைத்தனத்தைத் தகுந்தமுறையில் தரித்துக்கொள்ளும் எந்த மாமிசமும் மாமிசமான வார்த்தையானவரின் தெய்வீகத்தை தரிக்கவும் அதைச் சுவைத்துக்கொள்ளவும் முடியும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் மாணத்தின் சாயலை தான் பெறும் திருமுழுக்கால் தரித்துக்கொள்கிறான். எழுவான் தொடக்கம் படுவான் ஈறாக சகலத்தையும் கடந்த தேவன் தனது உன்னத குருத்துவத்தால் சகல பீடங்களிலும் தனது உன்னத கல்வாரிப் பலியை நற்கருணைப்பலியில் புதுப்பிக்கிறார். இவைகள் எல்லாவற்றிலும் மிகவும் ஐக்கியமாய் கிறிஸ்துவில் ஐக்கியப்படும் சகல மாமிசமும் என்றும் கிறிஸ்துவின் மகிமைக்குப் பங்காளிகளாகின்றனர். இதுவே கடவுள் அளிக்கும் பரமானந்தம்.

(தொடர்ச்சி [illegible])

# அப்பா! நீ எப்போ வருவாய்....?

(பி. ஜேசுருஜா, திருச்சி குருமடம்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

எமது கருமங்களை அவசர அவசரமாக முடித்துவிட்டு அவரது அறையிலே குழுமினோம். வழக்கம்போல் சிரித்த வண்ணமாகவே,

"இவ்வளவு கெதியாக வந்திற்றீங்க. கதிரைகளைக் கிட்ட இழுத்துப் போட்டு இருங்க ...சரி தம்பிமாரே, உங்கட்ட ஒரு கேள்வி கேட்கப் போறன். யாரு கடைசியா சுகமில்லாம இருந்தது? கடைசியா ஆஸ்பத்திரிக்குப்போனது யாரு?"

"ஒருவரும சுகமில்லாம இருக்கல மைலோட்"

(சிரிப்போடு) "க்...க்...க் சரியாய் போச்சு. ஏன் சுகமில்லாம இருக்கல? எல்லாரும் சுகமாக இருந்தா டாக்குத்தர் எப்படி உழைப்பார்? கெட்டிக்காரன்கள்...கெட்டிக்காரன்கள்.....Very good.... Very good......வேறென்ன புதினங்கள் இங்க? மழை இல்ல என்ன?

"ஆம் மைலோட், இப்ப ஒரு மாதமாக மழை இல்ல."

"அங்கேயும் மழை இல்ல. நல்லா மழைக்காக மன்றுடுங்க...pray hard pray hard"

இவ்விதமாக, எம் அன்புத் தந்தை எம்மோடு அளவளாவிக் கொண்டே இருந்தார். அதிகாரத் தொனியில் பேசியவரல்ல; மாறாக அன்புக் குரலில் பேசியவர். ஒரு தகப்பன் தனது பிள்ளையோடு எவ்வித அன்பாகப் பேசுகிறானோ, அவ்வாறே எம் தந்தையும் எம்மோடு பேசுவார்.

அன்று இரவு அவரது படுக்கை அறையில் படுக்கையைத் தயார் செய்தோம். அவர் இரு தலையணைகள் உபயோகிப்பது வழக்கமல்லவா? ஆனால், அங்கு ஒன்றுதான் இருந்தது. இன்னுமொரு தலையணை எடுப்பதற்காக எம்மில் ஒருவர் தந்தையின் அறையை விட்டு வெளியேறும் சமயத்தில்,

"இங்க வாரும்....இங்கவாரும்... எங்கபோகிறீர்."

"தலவாணி ஒன்று தான் இங்க இருக்கு மைலோட் இன்னொண்டு எடுக்கப்போறன்."

"சரியாய் போச்சு...என்டாப்பா ஒன்று காணாதா? க்....க்...க்....சரி, சரி, போய் எடுத்து வாரும். பஞ்சியா இருந்தா விடும்."

இவ்வாறாக எம் தந்தை எம் சுகத்தைக் கருதினவரன்றி தனது நலனைக் கருதினவரல்ல.

நாம் இன்பமாக வாழ்வதை தமது கண்களால் பார்த்து அடையும் மகிழ்ச்சியைவிட மேலானதைத் தாம் இவ்வுலகில் சுவைக்கப் போவதில்லை என்பதற்கொப்ப எம்மோடு வாழ்ந்தார். எமது துன்பத்திலும் தமக்கு முழுப்பங்கு உண்டு என்பதை தமது வாழ்க்கையில் காட்டத் தவறினவரல்ல. இவ்விதமாக அவருக்கும் எமக்குமிடையே இருந்த அந்தப் பாசத்தை வருணித்துக்கொண்டு போனால் அதற்கு முடிவே இராது.


இவ்வாறாக இரு தினங்களைக் கழித்தோம். எம் தந்தை எம்மிடம் விடைபெற வேண்டிய நேரமும் வந்தது. என்ன செய்வது? எம்மோடேயே எந்நாளும் இருந்தால் தமக்கென கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்துமுடிக்க முடியுமா? விமான நிலையம் செல்வதற்கு வாகனமும் வந்துவிட்டது. எம் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு எம்மை விட்டுப் பிரிந்தார் எம் அன்பு அப்பா. ஆம், இன்று அவர் எம்மைப் பிரிந்து சென்றுவிட்டாலும் இன்னும் சில மாதங்களில் திரும்பவும் எம்மிடம் வருவார்தானே என்ற எண்ணத்தால் எம் மனதைத் தேற்றிக் கொண்டு எமது இருப்பிடங்களுக்குச் சென்றோம்.

ஆனால் தந்தையே! நீ ஏன் எம் எல்லோரையும் ஏமாற்றி விட்டுச் சென்றுவிட்டாய்? எமது விடுதலை நாட்களை முடித்து யாழ் நகரிலிருந்து திருச்சி புறப்படுவதற்கு மூன்று தினங்களுக்கு முன் நீ சுகயீனமாக கொழும்பு செல்ல வேண்டியிருந்ததல்லவா? உன்னை வழி அனுப்புவதற்காக நாம் எல்லோரும் உனது காருக்கருகாமையில் நிற்கும்போது நீ எம்மிடம் வாக்குப்பண்ணியதையும் மறந்துவிட்டாயே. "நான் இந்த மூன்று தினங்களுள் நல்ல சுகம்பெற்று உங்கள் எல்லோரையும் பலாலி விமான நிலையத்தில் சந்தித்து உங்களைத் திருச்சிக்கு வழியனுப்ப மாதாவை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று உனது புன்னகை பூர்க்கும் வாயாலேயே கூறினாயல்லவா? உனது வாக்கை நம்பி எமது பிரயாணத்தையே மறந்து, உனது வரவை எதிர்பார்த்த வண்ணமாய் பலாலி விமான நிலையத்தில் நின்றோமே. ஆனால் அங்கு எம்மை ஏமாற்றி விட்டாயே! ஆம், சுகக்குறைவின் நிமித்தம் வரமுடியவில்லைப் போலும். பரவாயில்லை. சுகம் பெற்றவுடன் திருச்சி வருவாய் தானே என்று எண்ணிக்கொண்டு திருச்சி வந்து சேர்ந்தோம். இங்கு வந்தபின்பும் ஒருமாதமாக உனது வரவை எதிர்நோக்கிய வண்ணமாகவே இருந்தோம். நாம் உனது வரவை எதிர்பார்க்கின்றோம் என்பதை நீ எவ்வாறோ அறிந்துவிட்டாய் போலும். "பலாலி விமான நிலையத்தில் உங்களைச் சந்திப்பேன் என்று எனது மைந்தருக்குக் கூறினேன். ஆனால், அதை நிறைவேற்றத் தவறிவிட்டேன். ஆகையால் நான் திருச்சி சென்று எனது புதல்வர்களுடன் சில தினங்கள் தங்கிவிட்டு வரவேண்டும்" என்று முடிவு கட்டினாயாக்கும். 'நான் இரண்டு நாட்களுள் திருச்சி வருவேன்" என்று நீண்டமடல் வரைந்து அனுப்பிவிட்டு அம்மடல் எம்மை வந்தடையுமுன்னமே இறைவனடி அடைந்து விட்டாயே, எம்மை விட்டுச் சென்று விட்டாயே. 'நான் போகிறன். இனிமேல் உங்களைக் காணமாட்டேன்" என்ற வார்த்தைகளையாவது எழுதி அனுப்பிவிட்டு உனது பிரயாணத்தைத் தொடங்கி இருக்கலாமே!! மாறாக, நான் அங்கு வருவேனென்று கூறிவிட்டு எம்மை ஏமாற்றி விட்டா செல்ல வேண்டும்? வானொலி மூலம் எனது பிரிவை அறிந்து கொள்ளுங்கள் என்றாற் போல வானொலிதான் உனது பிரிவை எமக்கு எடுத்தியம்ப வேண்டியிருந்ததா? செவிக்கு இனிமையூட்டும் பாடல்களைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தோம் நாம் எல்லோரும். அன்று ஆடித திங்கள் 19-ம் நாள். மதியம் ஒன்றரைமணி. பாடல் மூலம் எமக்கு மகிழ்ச்சியை ஊட்டிய பின்புதான் உனது பிரிவை அறிவிக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டாயாக்கும். இன்பகரமான பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த செவிகள் அடுத்த நிமிடம் பெறவேண்டியிருந்த செய்தி இதுதானா? அதை நினைக்கும் போதெல்லாம் மனம் வேகுதே!! ஐயையோ!!! இவ்வேதனைக்குள்ளாயிருந்த நாம் மறுதினம் கண்டது "இன்னும் சில நாட்களில் நான் உங்களுடன் திருச்சியில் இருப்பேன்" என்னும் உனது திருச்சி வருகையை அறிவிக்கும் அன்பு மடலையல்லவா!! எரிகிற புண்ணிலே எண்ணெய்யை வார்த்தாற் போல இருந்தது உனது மடல். இவைகள் எல்லாவற்றிற்கும் பிறகுதானா உனது பிரிவை அறிவிக்கும் எமது சிறிய தந்தையின் தந்தித்தாள் எம்மை வந்தடைய வேண்டுமென்று சித்தம்கொண்டாய்? எப்போது உன்னை அண்டினாலும் என்ன வேண்டுமென்று கேட்கும் நீ, ஏன் உனது வருகையை பலமுறை கூறியும் எமக்குத் தராது சென்றுவிட்டாய்? எம்மோடு ஏதும் மனத்தாங்கலாய் இருந்தாயா...?

தந்தையே! கடைசியாக நாம் உன்னிடம் ஒன்றுதான் கேட்கிறோம். நீ எம்மிடம் வரமாட்டாயா? நாங்கள் தான் உன்னை அங்கு வந்து காணவேண்டுமா? எப்போது எம்மைப் பார்த்தாலும் நாம் பேசத் தொடங்குமுன் நீ பேசத் தொடங்கி விடுவாய். இப்போது நாம் இத்தனை வினாக்களை எழுப்பிய பின்பும் ஏன் மௌனமாய் இருக்கிறாய்? ஒரு வார்த்தையாவது கூற மாட்டாயா? கூறமாட்டாய்? தந்தையே! பேசமாட்டாயா?

கதறும் நெஞ்சுடனும், கலங்கிய கண்களுடனும் கடைசியாகக் கேட்கிறோம். "அப்பா! நீ எப்போ வருவாய்...?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## அமரர் அருட்திரு விக்ரர் இராசநாயகம் அடிகளார்

நிகழ்மதி 17-ம் நாள் வெள்ளியன்று ஐக்கிய அமெரிக்காவின் ஃபீனிக்சிலுள்ள புனித சூசையப்பர் வைத்தியசாலையில் அருட்திரு. இராசநாயகம் அடிகளார் பரமபதமடைந்தார். மரிக்கும்போது இவருக்கு வயது 57.

காவலூரைச் சொந்த பதியாகக்கொண்ட சுவாமிகள் புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின்பு சம்பத்திரிசியார் கல்லூரியிலும், கல்வி பயின்றார். பயிலுங்காலை காலஞ்சென்ற வண. உவாம்சிலி அடிகளாரின் ஞானவழி காட்டுதலில் குருத்துவத்தை நாடினர். கண்டியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர்சபையிற் சேர்ந்து 1942-ம் ஆண்டு மார்கழி 28-ம் நாள் குருவாகத் திருநிலைப் படுத்தப் பெற்றார்.

கண்டி மேற்றிராசனத்தில், கட்டுகஸ்தோட்டை, ருகல்லை, போகவந்தளாவை, முதலிய இடங்களிற் திருத்தொண்டாற்றி, தேவைப்பட்ட இடங்களிற் கல்விக் கூடங்களையும், தேவாலயங்களையும் அமைத்தார். சுகத்தாழ்வு காரணமாக அமெரிக்கா சென்ற அடிகளார் அங்கும் பல இடங்களிலும், இறுதியில் அரிசோனாவிலுள்ள யுமா பங்கிலும் திருப்பணி நிறைவேற்றினர்

தாய் நாட்டிலிருந்து, தூரவிருந்தபோதிலும் தமது சொந்தப்பங்கை மறந்திலர். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்தின் சலவைக் கற்பீடமும், சிலுவைப் பாதைச் சிற்பங்களும் அன்னாரின் உதாரத்துக்கு எடுத்துக் காட்டாய் என்றும் விளங்கும் எனக. புனித அந்தோனியார் ஆலயத்தைச் சார்ந்த முதற் குரு இவரேயென்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

இத்திங்கள் 20-ம் நாள் அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கொழும்பு கொட்டாஞ்சேனை சந்தலூசியா போலயத்திலும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் இளைப்பாற்றிப் பாடற்பலிகள் நிறைவேற்றப் பட்டன.

சுவாமிகளின் ஞானமைந்தரும், அவரிடம், வைதீக, லௌகிக நன்மை பெற்றவர்களும் அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவார்களாக.

✠

## நினைவு அஞ்சலி

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்"

**பீலிக்ஸ் பிரகாசம்**

தோற்றம்: 2-11-1887. மறைவு: 6-12-1971.

**மேரி வினிபிறட் ரெட்னம்**
**(திருமதி F. பிரகாசம்)**

தோற்றம்: 23-6-1900

மறைவு: 4-7-1944

ஓ! இரக்கமுள்ள திவ்விய யேசுவே, திருச்சிலுவையில் தேவரீர் சிந்தின விலைமதியாத திரு இரத்தத்தின் பேறுபலன்களைப் பார்த்து காலஞ்சென்ற உமது அடியார்களான பீலிக்ஸ் பிரகாசம், மேரி வினிபிறட் ரெட்னம் இவர்களின் ஆத்துமத்திற்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைத் தந்தருளும். நித்திய காலத்தின் பிரகாசம் இவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது, ஆமென்.

இவர்களது ஆன்மா சாந்தியுற எதிர்வரும் 6-ந்தேதி புதன் கிழமை (6-12-72) காலை ஆறு மணிக்கு யாழ். பரி அடைக்கல நாயகி ஆலயத்தில் ஒரு துக்கத பாடற்பூசை நிறைவேறும், இப்பைக் கண்ணுறும் அனைவரும் அவ ஆத்துமங்களின் இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருகர், பேரர்.
21/1, 4-ம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

**கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்**

நாள்: 3-12-72
நேரம்: மாலை 7மணி;
நடாத்துபவர்:
திரு: தொமஸ் அன்ரனி

* * *

நேரம்: மாலை 7-25
'நேயர் நேரம்' — இதழ் 7
நடாத்துபவர்:
செல்வம், அ. ம: தி.

**நன்றித்துதி**

பரிசுத்த சதாசகாயமாதா, புனித அந்தோனியார், புனித யூதாததேயு, புனித சூசையப்பர் இவர்களின் மன்றாட்டினால் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டு (29-10-72) இல் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன் பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன். இன்னும் எனது குடும்பத்திலுள்ளவர்கள் இறையன்பிலும், பிறரன்பிலும், வளர தேவையான சகல வரப்பிரசாதங்களையும், ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி இப்பரிசுத்தர்களை வேண்டுகின்றேன்.

இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

எவ் பி. எ...

கரவெட்டி.

## இளைஞர் மன்றம்

இலங்கைக் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும், சிறந்த சொற்பொழிவாளருமான அருட்திரு. செல்வரெத்தினம் அடிகளார் தலைமையில் இளைஞர் மன்றம் ஒன்று உருவாக வேண்டிய அவசியத்தை 20-11-72இல் நடைபெற்ற "தாழ்வு மனப்பான்மை" ஏன் என்ற கருத்தரங்கின்போது பல பெற்றோர்கள் வற்புறுத்தினார்கள். இவ்விளைஞர் மன்ற ஆலோசனைக் கூட்டம் ஒன்று அடிகளார் தலைமையில் நடைபெற்றதுடன், அகில இலங்கையிலும் இம்மன்றத்தின் கிளைகள் நிறுவப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

1973-ம் ஆண்டு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியாரின் விழாவை இளைஞர் மன்றம் கொழும்பில் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

## கொழும்புப் பாடசாலைகளில் புதிய விழிப்புணர்ச்சி

சிறந்த கத்தோலிக்க சமூக சேவையாளரும், தனக்கென வாழப் பிறர்க்கென வாழும் முன்னாள் ஆசிரியருமான திரு. கே. பி. ரட்ணையா அவர்கள் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை முதலிய இடங்களில் உள்ள கத்தோலிக்க பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கிறிஸ்தவ தமிழ்த் தொண்டர்களைப் பற்றிய சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்கின்றார் சுவாமி ஞானப்பிரகாசியாரின் 25 வருடத்தை முன்னிட்டு நடைபெறும் முதலாவது சொற்பொழிவு 18-11-72 வெள்ளவத்தை புனித லோறேஞ்சியார் கன்னியர் கல்லூரியில் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகத்தால் நிகழ்த்தப் பெற்றது. இரண்டாவது சொற்பொழிவு பம்பலப்பிட்டி புனித மரியாள் தமிழ்பாடசாலையில் 1-12-72இலும், அதனைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி பரிசுத்த திருக்குடும்பக் கன்னியர் கல்லூரியிலும் நடைபெறும்.

அருட்திரு. செல்வரெத்தினம் அடிகளார், புலவர் அரியநாயகம் ஆகியோர் சொற்பொழிவாளர்களாகக் கலந்து கொள்வார்கள்.

ஏ. டபிள்யூ. ஏ.

**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

திரு இருதயநாதர், கல்லறை ஆண்டவர் அவர்களின் இரக்கத்தாலும், சதா சகாயமாதா, அர்ச். அந்தோனியா, அர்ச்-யூதாதேயு மற்றும் புனிதர்களின் மன்றாட்டினாலும் நான் கேட்ட காரியம் சித்தியடைந்துவிட்டது. அவர்களின் நாமம் என்றும்புகழப்படுவதாக நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்,

ஓர் அடியாள்
புதுமாத்தலன்

**விரைவில் எதிர்பாருங்கள்:**

மறை அறிவையூட்டும் கட்டுரைகள், கவிதைகள், கதைகள், நாடகங்கள் அடங்கியது:

**"ஒளியை நோக்கி"** என்ற தலைப்பில் மலர்கிறது,

மறை ஆசிரியர்களின் **கிறிஸ்மஸ் மலர்.**

## உன்னதங் ......

[3-ம்பக்கத் தொடர்ச்சி]

இதுவே கடவுள் நல்ல மனதுள்ளோருக்குச் சதா அளிக்கும் சமாதானம்.

**கிறிஸ்துவின் சமாதானமும் கிறிஸ்தவ சகோதரத்துவமும்**

எங்கு கிறிஸ்துவின் சமாதானம உண்டோ அங்கு உண்மையான சகோதரத்துவம் உண்டு. எப்படி பரமதிரீத்துவம் நிலையான ஐக்கியமாய் இருக்கிறதோ அப்படியே திரீத்துவத்தின் சீவியத்திற்கு அழைக்கப்பட்டோர் எல்லோரும் என்றும் நிலைக்கும் அமைதிக்கு உரித்தாளர் ஆகின்றனர். சகல எல்லை[illegible]யும் கடந்த தேவன் சதா அன்பாய் இருக்கிறார். இவ்வன்பின் பரிமாறலைக் கடவுள் இலவசமாய் வார்த்தையான மாமிசமானவரின் பெறுபேறுகளால் சகல மனிதரும் பெறச் சித்தமானார். என்ன பெரும் பாக்கியம்! புனிதர்களின் ஐக்கியப் பிரயோசனம்!! கிறிஸ்துவின் மறையுடல் அதனின் சிரசின் சீவியத்தால் சீவிக்கிறது!!! கிறிஸ்து இவ்வுலகில் இருக்கும்போது எப்படி அழுவாருடன் அழுது மகிழ்வாருடன் மகிழ்ந்தாரோ அதேபோல் கிறிஸ்தவன் அவரின் சாயலைத்தாங்கி நீதியின் ஆட்சியையும் அவரது அன்பின் ஆட்சியையும் தனது சமூகத்தில் நிலைநாட்ட உழைப்பானாக. மரணமே உன் வெற்றி எங்கே? பாவமே உன் கொடுக்கு எங்கே? கிறிஸ்து வசகோதரமே, கிறிஸ்துவுக்காக கிறிஸ்துவின் எல்லை கடந்த அன்பின் கரங்களை விரிப்பாயாக. அவரின் அன்பின் அரவணைப்பில் எல்லோரும் சேர்ந்து கொள்ள உழைப்பாயாக, எல்லைகடந்த அன்பருக்கு எதுவித எல்லையும் வையாது இருப்பாயாக, கிறிஸ்துவின் இராட்சியத்திற்கு முட்டுக்கட்டையாய் இராது அவரின் அன்பின் அப்போஸ்தலனாகும் பெருமைக்குப் பாத்திரவானாகுக. கிறிஸ்துவின் சகோதரத்துவம் என்றும் வலுப்பெறுவதாக, ஆமென்.

● மனிதன் 'பாவம்' என்ற சொல்லையே வெறுத்து விலக்குகிறான்; காரணம், அது கடவுள் இருக்கிறார்; மனிதனுக்கு அறநெறி உணர்ச்சி அடிப்படையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது" என்று சின்னப்ப பாப்பரசர் அன்று ஒரு பொதுப் பேட்டியின்போது கூறியிருக்கின்றார்.

## இளவரசர்.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யுடன் எப்போதும் இருந்து வந்தாரென இவருக்கு அறிமுகமானோர் கூறுகின்றனர். இராணுவத்தில் இவர் சேவை செய்துவந்த காலத்தில் தான் ஓர் இளவரசரென எவருமே அறியாமல் ஒரு சாதாரண ஆளைப்போல் நடந்துகொண்டார். இவர் எப்போதும் பிறர்மட்டில் அன்பும், தருமசிந்தையுமுடையவராய் விளங்கினார்.

பன்றியிறைச்சிக் காரரான இன்னோ சென்சோ பியோறுக்கி 1954 ஆம் ஆண்டு மரித்தார். அதிலிருந்து பத்துவருடங்களின் பின் அவருடைய முத்திப்பேறு பெற்ற பட்டத்திற்கான விசாரணை ஆரம்பமாயிற்று; இவர் தனது கடையில் வாடிக்கைகாரருக்குப் பன்றிமாமிசம் விற்றுவந்த பணத்தில் அரைவாசியை ஒரு உண்டியலில் போட்டுவைத்து வார முடிவில் அதை எடுத்துப்போய் தான்கண்டுகொள்ளும் ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வழக்கமுடையவராய் இருந்தார். இவர் என்றுமே இரக்க சிந்தையும், சுத்த இருதயமுடையவராய் நெடுங்காலம் செய்துவந்த தருமதொண்டுகளால் சீவந்தராக இருந்தபோதே உயிர்வாழும் புனிதரெனக் கொண்டாடப் பெற்றார்.

ஒரு குடும்பஸ்திரியான எட்விஜே கார்போனி 1882 ஆம் ஆண்டு தனது 72ஆம் வயதில் மரணமடைந்தாள். சாடினியாவைச் சேர்ந்த இவள் றோமைநகரில் ஓர் அந்தரங்கமான வழியிலே, அமைதியான ஒரு மேன்மாடியில் சஞ்சரித்திருந்து செபத்திலும் தியானத்திலும் அதிக நேரத்தைச் செலவிட்டு ஒரு புனிதவதி போன்று சீவித்து வந்தாள். தனது அன்பால் மட்டுமல்ல, தன்னுடைய பிரசன்னத்தாலும் எல்லோராலும் நேசிக்கப்பட்டு வந்தாள். சில குருமார் மட்டுமே இவளுடைய அந்தரங்கத்தை அறிந்திருந்தனர். அதாவது இவள் தனது சரீரத்தில் திருமீட்பரின் ஐந்து திருக்காயங்கள் பதியப் பெற்றிருந்தாள்.

இம்மூவரினதும் சலுகையினாலே கடினநோய் கண்டிருந்த அநேகர் அற்புதமாகக் குணமடைந்திருக்கின்றனர். மற்றும் அரும்பெரும் வரங்களை அடைந்தவர்கள் அநேகாநேகர். இவைகள் பற்றிய சான்றுகளை வண. பிரான்செஸ்கோ அடிகளார் இன்று ஆராய்வாகப் பரிசோதித்து வருகின்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஞு மார்கழி மாதம் 2-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம் 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org